[1972 மார்ச் 10

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நிதிநிலை காரணமாக தற்பொழுது அப்படிப்பட்ட உத்தேசங்கள் எதுவுமில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், பிற்பட்டோர் மாணவ மாணவிகளுக்காக விடுதிகளை ஆங்காங்கு கட்டுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பிற்பட்ட மாணவ, மாணவிகளுக்காக எவ்வளவு விடுதிகள் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா? ஒவ்வொரு பகுதியிலேயும் என்ன முன் உரிமைகள் அளிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் கட்டிடம் கட்டுவதற்கு வழி வகுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தேவைகளை ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலமும் ஆங்காங்குள்ள டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் அதிகாரிகள் மூலமும் ஆராய்ச்சி செய்து ஆங்காங்கு இந்த உணவு விடுதிகளை உருவாக்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Tourist Bungalow for Devarabetta*

* 423 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government have received and proposal from the Collector of Dharmapuri district (last year) for constructing a tourist bungalow and also for providing other facilities at Devarabetta in Thali Block of Denkanikota taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, the Thali area in Hosur taluk is said to be "Little England" and is a very nice place for tourism. The Hon. Minister for Backward Classes knows it well; May I know from the Hon. Minister whether he will consider the request to construct a tourist bungalow there?

**மாண்புமிகு திரு க. இராசாராம் :** தலைவரவர்களே, இப்பொழுது சுற்றுலாத்துறையில் நான்கைந்து இடங்களில்தான் இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகைகள் கட்டுவதற்கான உத்தேசங்

1972 மார்ச் 10]

கள் ஏற்பட்டு உதகமண்டலம், ஹொகேனக்கல், குற்ருலம், மகாபலி புரம், ஏற்காடு இவைகளில் கட்டப்பட்டு வருகின்றன. அடுத்து தளி போன்ற இடங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு காரியங்கள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இப்படிப்பட்ட விடுதிகளைக் கட்டுவதா, வேண்டாமா என்பதை சுற்றுலா வாரியம் தான் முடிவு செய்கிறதா ? அப்படி முடிவு செய்யப்பட்டால் சுற்றுலா அமைச்சரவர்களையும் கலந்துகொண்டு அவர்கள் செய்கிருர்களா ? இரண்டுபேருக்கும் உள்ள அதிகார வரம்பு என்ன என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சுற்றுலா வாரியத்திற்கு ஒரு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். அதிகாரிகளும் இருக்கிருர்கள். அதற்கென்று ஆர்க்கிடெக்ட் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களெல்லாம் முடிவு செய்து அது அமைச்சருக்கு வந்து அதற்குப்பிறகு அமைச்சரவையிலே வைத்து, அதற்குப்பிறகு முடிவெடுக்கப்படுகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, உதகையில் புதிதாக 20-க்கு மேற்பட்ட காட்டேஜ்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளதா ? அதை மே திங்களுக்குள் கட்டிமுடிக்க ஆணையிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சுற்றுலா மாளிகைகள் சில கட்டுவதற்கு அரசு சில எண்ணங்களை மேற்கொண்டிருக்கிறது. அதற்கான காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

**திரு. சி. வி. எம். அண்ணுமலை :** தலைவரவர்களே, காஞ்சீபுரத்தில் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாக உள்ள கோரிக்கை கிடப்பிலே இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அப்படி அறிந்தால் உடனடியாகக் கட்ட முயற்சிக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, காஞ்சீபுரத்தில் அடுத்த ஆண்டு சுற்றுலா மாளிகை கட்ட

[1972 மார்ச் 10

சுற்றுலா வாரியத்தில் எண்ணமிருப்பதாக நான் அறிகிறேன். அந்த எண்ணம் அடுத்த ஆண்டில் நிறைவேறும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த எண்ணம் கைகூடும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன் என்கிறீர்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அந்த எண்ணம் கைகூடும் என்பதாக நினைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, ஒவ்வொரு சுற்றுலா மாளிகையிலும் எத்தனை அறைகள் கட்டப்படுகின்றன ? சுற்றுலா மாளிகைகளில் 4 சூட்ஸ், 5 சூட்ஸ் என்று ஏதாவது வரையறுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஒருவர் தங்குவதற்கான அறைகள், இருவர் தங்குவதற்கான அறைகள், ஒரு குடும்பமாகப் போகின்றவர்கள் தங்குவதற்குக் குறைந்த வாடகையிலேயுள்ள அறைகள் என்று பரவலாக ஒரு 10, 12 படுக்கைகள் என்று 50 பேர்கள் தங்கக்கூடிய முறையிலே முதலிலே கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. அதற்குமேல் நிலைமைகள் அபிவிருத்தியடைந்தால் அபிவிருத்தி செய்யப் படுகிறது.

### *Madras-Hosur State Transport buses*

* 424 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals with the Government to run State Transport Buses from Madras to Hosur and Madurai to Hosur ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is heavy traffic from Madras to Hosur and that is the only Highway road that leads people from other places in our State to Mysore State. I hear that a bus from Madras to Hosur was decided to be started from the 3rd of this month. May I know exactly what were the orders of the Government?